**ஊடக அறிவித்தல் இல. 05**

# தேர்தல் ஆணைக்குழு

**2022.03.08 ஆம் திகதி ஒன்றுகூடிய தேர்தல் ஆணைக்குழு, பின்வரும் முடிவுகளை எடுத்துள்ளதென்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது:**

- 2022 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றாக தேர்தல் ஆணைக்குழுவில் பதிவுசெய்வதற்கு 76 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதுடன், இவ்விண்ணப்பங்கள் சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கான செயல்முனைப்புகள்.

- வாக்களிப்பதற்கு இயலாமைக்குட்பட்ட ஆளொருவருக்கு மருத்துவச் சான்றிதழொன்றைச் சமர்ப்பித்து உதவியாளரொருவருடன் செல்வதற்கு தேர்தல் சட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதல் தடவையாக அவ்வாறான ஒரு சான்றிதழை சமர்ப்பித்து வாக்களிக்கும் ஆளொருவர் அதனைத் தொடர்ந்து நடைபெறும் தேர்தல்களின்போது மீண்டும் மருத்துவச் சான்றிதழொன்றை சமர்ப்பிக்காத நிலையில் அவர்களுக்கு விசேட அடையாள அட்டையொன்றை தேர்தல் ஆணைக்குழு விநியோகித்தல்.

- 2022 ஆம் ஆண்டில் வாக்காளர் தினத்தைக் கொண்டாடும் தேசிய வைபவத்தை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தலைமையில் 2022 மார்ச் மாதம் 11 ஆம் திகதி பி.ப. 4.00 மணிக்கு கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடாத்துதல்.

**தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,**

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

2022 மார்ச் மாதம் 08 ஆம் திகதி